Verified Reflective ™

கருக்கம்

ஆக்கிரமிப்பு–மாநிலத்தில் உள்ள சட்டத்திற்குப் புறம்பான ஆக்கிரமிப்புகளை அற்றல் – தலைமைச் செயலக அளவில் உயர்மட்டக்குழு (High Level Committee) அமைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

வாய்த் (நிழ 6(2) துறை

அரசாணை (நிலை) எண். 771

நாள்: 2.11.2006

படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை (நிலை) எண்.105, வருவாய்த்துறை, நாள்: 7.3.01

2. நீதிப்பேராணை மனு எண்.15673 முதல் 15686/2002 வரையில் சென்னை உயர்நீதிமன்ற 6.6.2002 நாளிட்ட தீர்ப்பு

மீண்டும் படிக்கவும்

ஆணை:-

சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண்கள் 15673 முதல் 15686/2002 வரையானவற்றில் வழங்கிய 6.6.2002 நாளிட்ட தீர்ப்பில் சட்டத்திற்குப் புறம்பான ஆக்ரமணங்களை கண்காணிப்பதற்கென தலைமைச் செயலக அளவில் குழு ஒன்றினை அமைத்து அதில் உள்ளூர் அரசு அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிமன்ற பிரதிநிதி ஆகியோரையும் இடம்பெறச் செய்து சட்டத்திற்குப் புறம்பான ஆக்ரமணங்களுக்கு அவர்களைப் பொறுப்பாக்க வேண்டும் என்றும், அவ்வாறு நிர்வாக அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பாக்கப்படாவிட்டால் மீண்டும் மீண்டும் தோன்றக் கூடிய இத்தகைய ஆக்ரமணங்களுக்கு ஒருவன ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பார்கள் தவிர ஆக்ரமணங்களை அகற்ற இயலாது என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

2. மேற்கண்ட உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி மாநில அளவில் ஒரு குழு அமைக்கவும் அமைபவிருக்கும் குழுவில் (High Level Committee) மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் சட்டம்) அவர்களின் தலைமையில் தலைமைச் செயலர், வருவாய் கற்றுப்புற குழும் மற்றும் வனம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், உள் (Home), பொதுப்பணி நெடுஞ்சாலை ஆகிய துறைகளின் செயலர்களையும், நிலைவாக ஆணையரையும் உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கலாம் எனவும், இக்குழுவில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், [illegible]

மாநகராட்சிகளிலிருந்து 6 உறுப்பினர்களையும் நகராட்சிகளிலிருந்து 2 உறுப்பினர்களையும் அலுவலர் சார்பற்ற உறுப்பினர்களாகச் சேர்த்து குழுவினை அமைக்கலாம் எனக் கருதப்பட்டது.

3. அதற்கிணங்க மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் சட்டம்) அவர்களை தலைவராகக் கொண்டு மாநில அளவிலான கீழ்க்காணும் அரசு அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவினை நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

1. அமைச்சர் (வருவாய் மற்றும் சட்டம்) – தலைவர்
2. தலைமைச் செயலர் – உறுப்பினர்
3. செயலர், வருவாய்த்துறை – உறுப்பினர்
4. செயலர், சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை – உறுப்பினர்
5. செயலர், ஊரக வளர்ச்சித்துறை – உறுப்பினர்
6. செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை – உறுப்பினர்
7. செயலர், உள் துறை – உறுப்பினர்
8. செயலர், பொதுப்பணித்துறை – உறுப்பினர்
9. செயலர், நெடுஞ்சாலைத்துறை – உறுப்பினர்
10. நிலநிர்வாக ஆணையர்

4. மேலும், கீழ்க்கண்ட அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும் இக்குழுவில் நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

1. திரு எஸ்.ஆர்.இராஜா, சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் தொகுதி
2. திரு டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன், சட்டமன்ற உறுப்பினர், பள்ளிப்பட்டு தொகுதி,
3. திரு என்.அன்பழகள், அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, சென்னை
4. திரு பி.செல்வராஜ், அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, கோவை
5. திரு சி.தனசேகரன், அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, சேலம்
6. திரு ஏ.நீலமேகம், அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, மதுரை
7. திரு எம்.அன்பழகன், அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, திருச்சி
8. திரு ஏ.துரை, அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, திருநெல்வேலி
9. திரு கே.நீலகண்டன், அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, அம்பத்தூர்
10. திரு கே.தங்கவேலு, அலுவல் சார்பற்ற உறுப்பினர், மாநகராட்சி, திருப்பூர்.
11.

5. மேலே கூறப்பட்ட குழுவானது சட்டத்திற்கு புறம்பான ஆக்ரமணங்களுக்கு பொறுப்பு ஏற்கனவும் எதிர்காலத்தில் ஆக்ரமணங்கள் தோன்றுவதை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கும். அத்துடன் கீழ்க்கண்ட பணிகளையும் கவனிக்கும்.

அ) நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள ஆக்கிமிப்புகளை அகற்றும் பணியினை கண்காணித்தல்;

ஆ) மாவட்டங்களில் செயல்படும் கண்காணிப்புக்குழுவின் பணிகளை ஆய்வு செய்யும் நிலநிர்வாக ஆணையரின் ஆய்வறிக்கையை மூன்று மாதங்களுக்கொருமுறை கூர்ந்தாய்வு செய்தல்;

Verified RedEstate™

இ) அரசு புறம்போக்கு நிலங்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள நிலையான கட்டிடங்கள் மூலம் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து முடிவு எடுத்தல்;

ஈ) மாவட்ட கண்காணிப்புக் குழுவில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து ஒரு மனதாக முடிவெடுக்க இயலாத இனங்களை இக்குழுவின் முடிவிற்கு அனுப்புதல்.

6. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மேலே பத்தி 3, 4 மற்றும் 5இல் உள்ள ஆணையின்படி மேல்நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

/ஆளுநரின் ஆணைப்படி/

எஸ்.ஆதிசேஷையா,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9
நகல்
பொதுத்துறை / சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை / ஊரக வளர்ச்சித்துறை / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை /உள்துறை/ பொதுப்பணித்துறை/ நெடுஞ்சாலைத்துறை, சென்னை–9.
திரு. எஸ்.ஆர்.இராஜா, சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் தொகுதி, தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம்.
திரு. டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன், சட்டமன்ற உறுப்பினர், பள்ளிப்பட்டு தொகுதி, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்.
திரு என்.அன்பழகன், உறுப்பினர், மாநகராட்சி, சென்னை–3 (ஆணையர், சென்னை மாநகராட்சி வழியாக).
திரு பி.செல்வராஜ், உறுப்பினர் மாநகராட்சி, கோவை (ஆணையர், கோவை மாநகராட்சி வழியாக).
திரு சி.தனசேகரன், உறுப்பினர், மாநகராட்சி, சேலம் (ஆணையர், சேலம் மாநகராட்சி வழியாக).
திரு ஏ.நீலமேகம், உறுப்பினர், மாநகராட்சி, மதுரை (ஆணையர், மதுரை மாநகராட்சி வழியாக).
திரு எம்.அன்பழகன், உறுப்பினர், மாநகராட்சி, திருச்சி (ஆணையர், திருச்சி மாநகராட்சி வழியாக).
திரு ஏ.துரை, உறுப்பினர், மாநகராட்சி, திருநெல்வேலி (ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி வழியாக).
திரு கே.நீலகண்டன், நகராட்சி, அம்பத்தூர் (ஆணையர், அம்பத்தூர் நகராட்சி, திருவள்ளூர் மாவட்டம் வழியாக)
திரு கே.தங்கவேலு, உறுப்பினர், நகராட்சி, திருப்பூர் (ஆணையர், திருப்பூர் நகராட்சி, கோவை மாவட்டம் வழியாக)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

Verified eReadEstate ™

Verified RealEstate™